21 JUL 2004
Eastern University, Sri Lanka.

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி – I 1999/2000 (வெளிவாரி)

(டிசெம்பர்-2003/ஜனவரி-2004)

## EDU 202 பாடசாலை முகாமைத்துவம்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01. (அ) பாடசாலை ஒரு நிறுவனம் என்ற ரீதியில் இதன் பண்புகளைச் சுருக்கமாக விளக்குக.

(ஆ) பயன்தரும் பாடசாலை ஒன்றின் பண்புகளைச் சுருக்கமாக விளக்குக.

02. (அ) "நல்லதொரு பாடசாலை சிறப்பான கவின் நிலையைக் (School Climate) கொண்டிருக்கும்" இக்கூற்றினை விபரிக்க.

(ஆ) ஒரு பாடசாலை அதிபர் சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும் பாடசாலை யொன்றை ஏற்படுத்த எதிர்கால இலக்குகளைத் தீர்மானிக்க வேண்டும். இதற்காக அவர் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை வரிசைப்படுத்துக.

03. பின்வருவனவற்றை விளக்குக.

(அ) தொடர்பாடல்.
(ஆ) வேலைப் பகிர்வு
(இ) வினைத்திறனும் விளைதிறனும்

04. (அ) அதிபர் எந்த ஒரு நடவடிக்கைகளிலும் தீர்மானம் எடுத்தல் முக்கிய கடமையாகின்றது. இத்தீர்மானம் எடுத்தலின்போது அதிபர் எடுக்க வேண்டிய படிமுறைகளை விளக்குக.

(ஆ) அதிபர் ஒருவர் பாடசாலையில் பங்குபற்றும் முகாமைத்துவத்தை அறி முகப்படுத்த வேண்டுமெனின் இதற்காக எடுக்க வேண்டிய செயற்பாடுகளை விளக்குக.

05. (அ) கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டில் ஓர் ஆசிரியருக்கு இருக்க வேண்டிய சிறந்த பண்புகளை வரிசைப்படுத்தி அதில் ஒன்றைச் சுருக்கமாக விளக்குக.

(ஆ) ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்காக அதிபர் பாடசாலையில் எடுக்க வேண்டிய முக்கிய விடயங்களை விளக்குக.

(இ) பாடசாலையின் உள்ளக மேற்பார்வையொன்றை (Internal Supervision) அதிபர் எவ்வாறு திட்டமிட வேண்டும் என்பதை விளக்குக.

(அ) பாடசாலையென்றில் "கல்வி முகாமைத்துவ தகவல்தொகுதி" (EMIS) ஒன்று இருப்பது எதிர்காலத் திட்டமிடலுக்கு மிகவும் அவசியமாகும் இக்கூற்றை விளக்குக.

(ஆ) நிறுவன மட்டத் திட்டமிடலின் முக்கியத்துவம் பற்றி விளக்குக.

(இ) அறிவுறுத்தும் தலைமைத்துவப் பண்பையுடையவராக (Instructional Leadership) இருக்கும் அதிபர் ஒருவரின் பண்புகளைக் கூறி அப்பண்புகளினால் ஏற்படும் நன்மைகளை விளக்குக.

(அ) "சிறந்த பயன் தரும் பாடசாலையை உருவாக்க பாடசாலையுடன் சமுகம் ஒன்றிணைய வேண்டும்." இக்கூற்றினை விளக்குக.

(ஆ) சமுகம் பாடசாலைக்கு எவ்வெவ் வழிகளில் உதவி புரிகின்றதென்பதை விளக்குக.

(இ) பாடசாலையில் நடைமுறையில் இருக்கும் வசதிகள் சேவைகள் கட்டணம், பாடசாலை அபிவிருத்திச் சங்க கட்டணம் பற்றி சுருக்கமான விளக்கம் தருக.

(அ) ஒரு சமுகத்தினால் ஒரு பாடசாலை நல்ல பாடசாலை என்ற பெயரைப் பெற வேண்டுமாயின் எப்பண்புகளைக் கொண்டிருக்கும்?

(ஆ) பாடசாலையின் வினைத்திறனை அதிகரிப்பதற்கு அதிபர் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை விபரிக்குக.

********